


சென்னை மேற்கு, சென்னை தென் மேற்கு மாவட்டக் கழகங்கள் சார்பில் SIRஐ கண்டித்து சேப்பாக்கத்தில் நடைபெற்ற மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, எம்.பி., இந்திய கம்யூனிஸ்ட் முன்னாள் மாநில செயலாளர் இரா.முத்தரசன், கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, கழக செய்தித் தொடர்புத் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், தலைமை நிலைய செயலாளர்கள் துறைமுகம் காஜா, பூச்சி முருகன், மாவட்டக் கழகச் செயலாளர்கள் நே.சிற்றரசு, மயிலை த.வேலு எம்.எல்.ஏ., சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் நா.எழிலன், ஜெ.கருணாநிதி, எம்.கே.மோகன், பகுதிச் செயலாளர்கள் எஸ்.மதன் மோகன், ஏ.ஆர்.பி.எம்.காமராஜ், மா.பா.அன்புதுரை, வினோத் வேலாயுதம், நா.இராமலிங்கம்,ச.பரமசிவம் கே.ஏழுமலை, நந்தனம் மதி,எஸ்.முரளி, மற்றும் இறையன்பன் குத்தூஸ், வே.கௌதமன் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள், தோழமைக்கட்சி நிர்வாகிகள், தோழர்கள் பல்லாயிரக்கணக்கில் திரண்டு கண்டன முழக்கமிட்டனர்.


### பிரான்சு நாட்டின் 'செவாலியே' விருதுபெறும்

# கலை இயக்குநர் தோட்டா தரணிக்கு பாராட்டுகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, நவ. 13-

கலை இயக்குநர் தோட்டா தரணி அவர்களுக்கு, பிரான்சு அரசின் உயரிய அங்கீகாரமான 'செவாலியே' விருது அறிவிக்கப் பட்டிருப்பது குறித்து வாழ்த்துத் தெரிவித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-



**ஆக்சுபோர்டில் ஒளிரும் தந்தை பெரியாரின் ஓவியத்தைத் தந்து நம்மை மகிழ்ச்சியில் ஆழ்த்திய தோட்டா தரணி அவர்களுக்கு, பிரான்சு அரசின் உயரிய அங்கீகாரமான 'செவாலியே' விருது அறிவிக்கப்பட்டிருப்பது நம் மகிழ்ச்சியை இரட்டிப்பாக்கியுள்ளது!**

**அரசு கவின் கலைக் கல்லூரியில் பயின்ற தோட்டா தரணி அவர்கள், இந்தியாவில் இருந்து இவ்விருது பெற்ற மிகப்பெரும் ஆளுமைகளின் வரிசையில் இணையவுள்ளது பெருமை யளிக்கிறது. பார் போற்றும் உங்கள் சாதனைக்குப் பாராட்டுகள்!**

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.



மதுரையில் நெடுஞ்சாலைத் துறை சார்பில் ரூபாய் 150 கோடி மதிப்பீட்டில் 2100 மீட்டர் நீளத்தில் மேலமடை மேம்பாலம் கட்டப்பட்டு வரும் பணிகளை பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு செய்து பார்வையிட்டார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் பிரவீன் குமார், மதுரை வடக்கு சட்டமன்ற உறுப்பினர் கோ.தளபதி, மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் மற்றும் அதிகாரிகள் உடன் உள்ளனர்.



நந்தனம் ஒருங்கிணைந்த வணிகவரி வளாகக் கூட்டரங்கில், நேற்று (12.11.2025) வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் 2025ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்திற்கான வணிகவரி இணை ஆணையர்களின் பணித்திறன் குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வணிகவரி மற்றும் பதிவுத் துறை அரசு செயலாளர் திருமதி ஷில்பா பிரபாகர் சதீஷ், வணிகவரி ஆணையர் எஸ். நாகராஜன், இணை ஆணையர் (நிர்வாகம்) திருமதி மொ.நா. பூங்கொடி, மற்றும் வணிகவரி உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க., மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் முத்துக்கடை பேருந்து நிலையத்தில் ஒன்றிய பா.ஜ.க. அரசின் கை பாவையாக செயல்படும் இந்திய தேர்தல் ஆணையத்தைக் கண்டிதது மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம். தி.மு.க. மாநில சுற்றுச்சூழல் அணி துணை செயலாளர் ஆர்.வினோத் காந்திதலைமையிலும் கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் தி.மு.க. கொள்கை பரப்பு செயலாளர் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் கண்டன உரையிலும் மற்றும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது இதில் மாவட்ட நிர்வாகிகள் ஒன்றிய நகர பேரூர் செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழகத்தினர் கலந்து கொண்டனர்.